தட்டும் ஒலி) மக்கள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும் எனக் கூறி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையினை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சிக்குட்பட்ட மலைக் கிராமங்களான பீஞ்சமந்தை, பலாம்பட்டு, மேலரசம்பட்டு மற்றும் வரதலாம்பட்டு ஊராட்சிகளுக்குக் காப்புக் காடுகளில் தார்ச் சாலைகள் அமைக்க பயனீட்டாளர் துறையிடமிருந்து முழுமையான கருத்துரு வனத் துறைக்குப் பெறப்படும்பட்சத்தில் அதனைப் பரிசீலனை செய்து, மத்திய அரசின் முன்னனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

முற்பகல் 11-30

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆறுதலான பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாய், தந்தை, ஆசான் என்று உலகத்தில் எனக்கிருந்த ஒரே ஒரு துணை என் தாய் சந்தியா என்று தாயை தெய்வமாகப் போற்றிப் புகழ்ந்து, வணங்கி வருபவர்தான் தரணிபோற்றும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் தங்களின் இதயங்களில், தங்களுடைய வார்த்தைகளில், அம்மா, அம்மா, அம்மா என்று தங்களது தாயாக, தங்களைக் காக்கும் தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாசத்தினுடைய வெளிப்பாடுதான், அந்த அன்பினுடைய வெளிப்பாடுதான், இந்த இமாலய வெற்றி என்பதை இந்தியாவில் இருக்கக்கூடிய அனைவரும் உணர்ந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, மக்கள் நலத் திட்டங்களில் வெற்றி, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு நலத் திட்டங்களை மக்களுக்கு அளித்து வருகிறார்கள்.

2015 பிப்ரவரி 18]

சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய 150 ஆம் ஆண்டு பிறந்த நாளில் மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதைப் போன்று, ஒரு வீரத் துறவியைப் போல் வாழ்ந்து, சுவாமி விவேகானந்தர் அவர்கள் எந்த நோக்கத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு மக்களுக்காகப் பணியாற்றினார்களோ, அதே வழியில் மாண்புமிகு அம்மா அவர்களும் மக்களுக்குச் சேவைகளைச் செய்து வருகிறார்கள். இன்றல்ல, நேற்றல்ல என்றென்றும் அம்மாதான் தமிழகம், தமிழகம்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி அதிக அளவில் மலைக் கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு, அள்ளேரி, குறுமலை, நச்சிமேடு, வெள்ளக்கல்மலை போன்ற மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்தால் சிறப்பாக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அந்த மலைப் பகுதிகளில் பள்ளிகளையெல்லாம் திறந்து, பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய கட்டட வசதி, இருப்பிட வசதி, தங்கும் உறைவிடப் பள்ளி போன்றவற்றையெல்லாம் பல கிராமங்களுக்கிடையில் கட்டித் தந்திருக்கக்கூடிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

அப்படிப்பட்ட ஒரு நல்ல, சீரிய தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சாலை வசதிகளைச் செய்து கொடுக்குமேயானால் மலைவாழ் மக்களுடைய வாழ்வு வளம் பெறும். பொதுவாக மலைவாழ் மக்கள், சாதாரண ஏழையெளிய மக்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்காகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய முகத்தைப் பார்த்தாலே போதுமென்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, பொருளாதார ரீதியாகப் பார்ப்போமேயானாலும்கூட, தனி நபர் வருமானம் உயர வேண்டுமானால் ஒரு பகுதி, ஒரு நாடு, சாலை வசதிகளால் மிகவும் சிறப்பாக மேம்படுத்தப்படவேண்டும். அந்த வகையில், கடந்த நான்கு ஆண்டுகளில், இதுவரையில் எந்த அரசும் செய்திராத சாதனையாக, மேதகு ஆளுநர் உரையில் ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு 10,637 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உள்ளபடியே பாராட்டிற்குரியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழையெளிய மக்கள், மலைவாழ் மக்களுடைய வாழ்வாதாரத்தைக்

கருத்தில்கொண்டு அந்த மக்களுக்குச் சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதற்கிணங்க, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழக அரசு, பயனீட்டாளர் துறையிடமிருந்து கருத்துருவைப் பெற்று, அந்தச் சாலைகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம்

***43534—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஏரியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி, திட்டங்கள் தந்த தாய்க்கு திருவரங்கம் தந்த வெகுமானம், இதை இந்த உலகம் சொல்லி மகிழுமே இன்னும் வெகுகாலம் என்று சொல்லி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஏரியூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் செயல்படும் சித்த

மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்டித் தருவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஏரியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதில் சித்த மருத்துவப் பிரிவு நல்ல முறையில் இயங்கிவருகிறது. கட்டட வசதி இன்மையால் அந்த மையம் சீராகச் செயல்படுவதில் சிரமம் இருக்கிறது. அதிகமான மக்கள் பயன்பெறுகின்ற காரணத்தால், அதைக் கவனத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அங்கு கட்டடம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பாராட்டிற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சித்த மருத்துவப் பிரிவிலே நாள் ஒன்றுக்கு 76 நோயாளிகள் வந்து மிகச் சிறப்பாகச் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். பொதுவாக அந்தந்த மருத்துவமனைக் கட்டடங்களிலே இந்திய மருத்துவப் பிரிவுகளுக்கென தேவையான அனைத்து வசதிகளும் மருத்துவமனை நிருவாகத்தால் செய்யப்படுகின்றன. அந்தவகையிலே, ஏரியூர், அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலே செயல்படும் இந்தச் சித்த மருத்துவப் பிரிவிற்கு இடவசதி மற்றும் தேவையான பிற அனைத்து வசதிகளும் மருத்துவமனை வளாகத்திலே செய்யப்படுகின்றன. தனியாகத் தேவைப்படுகின்றபட்சத்திலே சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் மூலமாக தனியாகவும் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.